ISSN:2582-9599



# தனிக்குடித்தனம் நாடகத்தில் இடம்பெறும் பெண்ணியச் சிந்தனை

**மா. பாப்பா**

**உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்,**

**பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை – 18.**

42

**ஆய்வுச் சுருக்கம்**

சமூகத்தில் நடக்கும் பல்வேறு பிரச்சனைகளைத் தம் கண்முன் கதைப்பாத்திரங்களின் வழி எடுத்துரைக்கும் இலக்கியமே நாடக இலக்கியம். அதுவும் பெண்கள் இச்சமூகத்திலும், குடும்பத்திலும் பல்வேறு இன்னல்களைச் சந்திக்கின்றனர். அத்தகைய பெண்கள் தங்களின் அறிவாலும் ஆற்றலாலும் இன்னல்களிலிருந்து விடுபட வழிகாட்டும் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதாக இந்நாடகம் அமைகிறது.

**முன்னுரை**

சமுதாயத்திற்கும், கலை இலக்கியப் படைப்பிற்கும் நெருக்கமான உறவு உண்டு. அதிலும் குறிப்பாக மனித வாழ்க்கையின் பிரதிபலிப்பாக இலக்கியம் திகழ்கிறது. ஆகவே தான் இலக்கியத்தை மனித வாழ்க்கையின் ‘‘காலம் காட்டும் கண்ணாடி’’ என்று அறிஞர் குறிப்பிடுவர். காரணம் இலக்கியப் படைப்பாளிகள் சமுதாயத்தின் ஓர் அங்கம் என்பதால், சமுதாயத்தில் நடக்கும் பிரச்சினைகளை மற்றவர்களை விடக் கூர்ந்து நோக்குகின்றார்கள். அந்தவகையில் தன்னைப் பாதித்த பிரச்சனை எது என்பதை அறிந்து கவிதையாக, கதையாக, நாடகமாகப் படைத்துக் கொண்டு இருக்கின்றார்கள். அவ் வகையில் மெரினாவின் ‘தனிக்குடித்தனம்’ நாடகம் சமூகத்தில் பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்களை ஆராய்வதாக இவ்வியல் அமைகிறது.

**பெண்மை-விளக்கம்**

பெண்மை என்ற சொல்லுக்கும்,

**‘‘பெண்ணின் இயல்பு அல்லது தன்மை - Feminity womanliness”[1]**

என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி விளக்கம் தருகிறது. திரு.வி.க. பெண்மையைப் பற்றிக் கூறும்போது,

**‘‘அடக்கம், பொறுமை, தியாகம், பாநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மையாகும்’’[2]**

என்று குறிப்பிடுகின்றார். பெண்மைப் பற்றி பல அறிஞர்கள் விளக்கம் அளித்தாலும் பெண்கள் பற்றிய கண்ணோட்டம் சமுதாயத்தில் அப்பெண்ணின் உள்ளார்ந்த பண்புகளில் இருந்து வழுவாமல் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறது. மேலும், பெண்களின் முயற்சிக்கு பெண்ணே எதிரியாக இருப்பதையும், ஆணாதிக்கத்தால் பெண்கள் படும் இன்னல்களையும் எடுத்தியம்புவதாகவும் இந்நாடகம் அமைகிறது.

**பெண்ணடிமைத் தனம்**

‘பெண்கள் நாட்டின் கண்கள்’ என்ற சொல் ஒலித்து வந்தாலும் பெண்கள் இன்றைய

காலகட்டங்களிலும் அடிமைப்பட்டே உள்ளனர். பாரதியின் கூற்றுப் படி,

**“அறிவு கொண்ட மனித வுயிர்களை**
**அடிமையாக்க முயல்பவர் பித்தரான்”**[3]

என்று பாடினாலும் இன்றளவும் பெண்கள் குடும்பத்திலும், சமூகத்திலும் அடிமைப்படுத்தப்படுகின்ற நிலைதான் உள்ளது என்பதை, ஆர்.ஜீ.பாலு தன் மனைவி சுகந்தாவிடம்,

**“நேத்து ராத்திரி ரிகர்ஸல் ஹாலுக்கு வந்திருந்தேன். உன்னை இங்கே காணமே…. எங்கே போயிருந்த என்றான்.”**

சுகந்தா டைரக்டரோட வெளியே போயிருந்தேன் என்றாள். நீ நாளைக்கு வளர்பிறை நாடகத்திலே நடிக்கக் கூடாது என்று கூறினான். இதைக்கேட்டு மனம் உடைந்த சுகந்தா என்னை நீங்கள் தடுக்க முடியாது நான் கண்டிப்பாகச் செல்வேன் என்றாள். உடனே பாலு, ‘கணவனின் கௌரவம் தான் மனைவியின் கௌரவம்’ என்று கூறி, நான் விரும்பியதை மட்டும் நீ செய்ய வேண்டும் என்றான். இதிலிருந்து பெண்கள் தான் விரும்பியதைச் செய்யமுடியாமலும் பெண்களுக்கு மனது உண்டு என்பதையும் யாரும் அறிவது கிடையாது. திருமணம் என்ற ஒன்று நடந்த பின், பெண் தன் அனைத்து ஆசைகளையும் கணவனுக்காக விட்டு விட்டு அடிமைபட்டுதான் இருக்க வேண்டும் என்று என்னும் நிலையினை எடுத்துரைக்கிறார்.

**ஆணாதிக்கப் போக்கு**

குடும்பத்திலும், சமூகத்திலும் ஆண், பெண்ணைத் தன் ஆதிக்க உணர்வினால் அடக்கியாளும் குணம் கொண்டவனாக இருக்கின்றான். ஆணின் ஆதிக்கப் போக்கினால் பெண் பல கொடுமைக்கு உள்ளாகிறாள். பெண்களுக்கு மனம் உண்டு என்பதை மறந்து சுயநலமே பெரிதாக எண்ணிக் கொடுமைகளுக்கு உட்படுத்துகின்றான்.

**“ஆடவன் பெண்ணுரிமையைக் கடிந்ததற்குக் காரணம் ஆணுலகின் தன்னலமே. பெண் காமப்பொருளாகவும், பணியாளாகவும், கொண்டவர்கள் தொட்டுப் பெண் வலிமை இழக்கலானாள். வலிய ஆண் கொடுமை மெலிய பெண்ணின் உரிமைகளைப் பரித்தல் செய்தன.”**[4]

என்று நாஞ்சில் ஆனந்தன் குறிப்பிடுகிறார். இதுபோல இந்நாடகத்தில் சோமு தன் மனைவி சுகுணா தன். தங்கை கமலாவிடம் சண்டை போட்டதை மனதில் வைத்து அவளிடம் சுகுணா உனக்கு எப்பவுமே வாய் கொஞ்சம் துடுக்குதான் என்று அவளை அடக்கினான் என்ன நடந்தது என்று விசாரிக்காமல் தன்னைக் கல்யாணம் செய்த குற்றத்திற்காக சோமுவும் தன்னைப் புரிந்து கொள்ளாமல் ஆதிக்கம் செலுத்துவதும், தன் அக்கா கணவர் சுகந்தாவை தான் ஒரு கதையாசிரியர் என்று ஏமாற்றித் திருமணம் செய்து கொண்டு சுகந்தாவை அடிமைப்படுத்துவதுடன், அவளைத் தன் வாழ்விலிருந்து ஒதுக்கி வைக்கும் சூழலை ஆசிரியர் படம் பிடித்துக் காட்டுகிறார்.

ஒரு ஆண் தன் ஆதிக்க உணர்வால் என்ன வேண்டும் என்றாலும் செய்யலாம். ஆனால், ஒரு பெண் தனக்குப் பிடித்த வேலையைச் செய்தால், அவளை ஒதுக்கி வைக்கும் நிலை இச்சமூகத்தில் உள்ளதை எடுத்தியம்புகிறார். சுகந்தா தன்னோடு பழகும் எடிட்டர் தன் ஆதிக்க உணர்வால் சுகந்தா திருமணம் ஆணவள் என்று தெரிந்தும் அவளிடம் நெருங்கிப் பழகும் நிலைக்கு

வந்தான். தான் ஒரு ஆண் என்பதால் தான் நினைத்ததை அடைந்து விடலாம் என்று எண்ணிய இழிவான குணத்தினை எடுத்துரைக்கிறார்.

**“பெண்ணடிமை திரூமட்டும் பேசும் திருநாட்டில்**

**மண்ணடிமை தீர்ந்து வரல் முயற்கொம்பே”[5]**

என்ற பாரதிதாசனின் கூற்றிற்கு ஏற்ப, பெண்களைப் போகப் பொருளாகப் பார்க்காமல் அவளின் அறிவையும் ஆற்றலையும் உயர்வாக மதித்துப் போற்ற வேண்டும். ஆணுக்குப் பெண் சமம் என்று பார்க்கும் கண்ணோட்டம் உருவாக வேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

**பெண் ஒடுக்குமுறை**

பெண்கள் வீட்டிலும் வேலைத் தளங்களிலும் ஒடுக்கப்படுகிறாள். பெண் தானே என்ற ஏளன வார்த்தையால் அடக்கப்படுகின்றாள். மேலும் பிறந்த வீட்டில் தன் தந்தைக்கும், தன் உடன் பிறந்தவருக்கும் கட்டுப்பட்டுத் தான் இருக்க வேண்டிய நிலை உள்ளது. புகுந்த வீட்டில் தன் மாமியாருக்கும் கணவருக்கு நாத்தனாருக்கும் கட்டுப்பட்டுத்தான் வாழ வேண்டிய நிலை இன்றளவும் உள்ளது என்பதை, சுகுணா தன் திருமணம் வாழ்வில் தன்னை விரும்பிய சோமு தன்னை நல்லமுறையில் வைத்திருப்பான் என்று எண்ணிதான் செல்கிறாள். அங்கு மாமியாரின் கொடுமை பல, விளக்கேற்ற நேரமாயிடுச்சு என்பதற்காக.

**“ஏ! நல்லெண்ணெய் விக்கிற விலையிலே இப்படிக் கொட்டி மொழுகினா வீடு திவாலாயிடும்’னு முணுமுணுத்தாள்.”**

இதைப் பார்த்த சுகுணா ஒன்றும் சொல்லவில்லை. இது மட்டுமல்லாமல் கமலாவேற தன்னைப் பற்றி அம்மாவிடம் கூறியதால் அவர்கள் இருவரும் என்னை அங்கே இருக்காதபடி திட்டினார்கள்.

நான் வேலை செய்வது அவர்களுக்கு இழுக்காக இருக்கிறது என்று என்னை அடிக்காத அளவுக்கு வார்த்தையில் கொன்றார்கள்ள என்று தன் அம்மாவிடம் முறையிட்டாள். இதிலிருந்து பெண்கள் தன் சுதந்திரத்தை இழந்து தான் வாழவேண்டும் என்றும் அவளின் உரிமைகள் அனைத்தும் ஆண்களால் மட்டுமின்றி புகுந்த வீட்டுப் பெண்களாலும் பல இன்னல்களைச் சந்தித்து ஒடுக்கப்படும் நிலை ஏற்படுவதை வெளிக்கொணர்கிறார் ஆசிரியர்.

**அநீதியை எதிர்த்தல்**

பெண்கள் பயவுணர்வு இன்றி இவ்வுலகில் வாழ்ந்தால் சுதந்திரமாக வாழலாம். தனக்கு நேரும் கொடுமைகளை எதிர்த்துப் போராட வேண்டும். சுயமாக முடிவெடுக்கும் தன்மை கொண்டவளாக வாழ்ந்தால் பெண்கள் சிறப்பாக வாழமுடியும். என்பதை பாரதி,

**“பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்**

**பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்”[6]**

என்று ஆணுக்கு நிகராகப் பெண்களைப் பாவித்து பாடுகிறார். ஆண்கள் பெண்களின் அறிவினை துச்சமாக எண்ணி அவளிடம் நெருங்கிப் பழகி அவளின் வாழ்வைப் பாழக்க முயல்கிறான்.. இத்தகைய கொடுமைகள் பெண்களுக்கு நடக்கும் போது, பெண் சாதுவாக இல்லாமல் அதைத் தட்டிக் கேட்ட வேண்டும் என்பதை இந்நாடகத்தில்,

எடிட்டர் சுகந்தாவிடம் தொட்டுப் பேசினான். “ ‘பளார்’னு கன்னத்திலே ஒண்ணு கொடுத்துட்டு, செருப்பு பிஞ்சு போயிடும் என்று கூறினாள். இதுபோல வேறு எந்தப் பெண்ணிடமும் நடந்து கொள்ள முற்பட்டால் உன்னை உயிரோடு விட மாட்டேன்” என்று அந்த நிமிடமே தனக்கு வரும் அநீதியைத் தட்டிக் கேட்டாள். இதுபோல ஒவ்வொரு பெண்ணும் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக,

**“நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**

**நிலத்தில் யாருக்கும் அஞ்சாத ஞானச் செருக்கும்”[7]**

கொண்டவளாக வாழ்ந்தால் பெண்களுக்கு எதிராக நடக்கும் குற்றங்கள் குறைந்து விடும் என்கிறார் ஆசிரியர். அநீதி வரும்போது அஞ்சாமல் துணிந்து செயல்பட வேண்டும் என்பதை வெளிக்கொணர்கிறார்.

**பெண் உரிமை**

ஒரு பெண் ஆணுக்கு என்றும் அடிமைப்பட்டுத்தான் இருக்க வேண்டும் என்பதையும் இந்தக் கட்டமைப்புக்களைத் தாண்டிப் பெண்கள் வெளியில் வரமுற்பட்டால், அதனை இந்தச் சமூகம் ஏற்றுக் கொள்ள மறுப்பதையும் பாரதி வன்மையாகக் கண்டிக்கின்றார்.

**“பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் – புவி**
**பேணி வளர்த்திடும் ஈசன்**

**மண்ணுக்குள்ளே சில மூடர் – நல்ல**

**மாதர் அறிவைக் கெடுத்தார்”[8]**

என்று பெண்ணுக்கான உரிமை மறுக்கப்படுவதை எதிர்த்துப் போராடினார் என்பதை, இந்நாடகத்தில் சுகந்தா தன் கணவர் பாலு விதிக்கும் கட்டுப்பாடுகளைத் தாண்டிச் சென்றதால், தன் தங்கை கூறும் அறிவுரைக்குப் பதில் கூறுகிறாள்.

**“என்ன சுகுணா நீயும் அம்மா மாதிரியே பேச ஆரம்பிச்சுட்டே? முன் காலம் போல பொண்ணுங்க கட்டுப் பெட்டி மாதிரி வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்க முடியுமா? அந்தக்காலம் மலையேறிப் போயுடுச்சு. படிக்கவும், ஆபீஸ் போகவும், பொழுதைப் போக்கவும் அவங்க வெளியே வந்துதானே ஆகணும் நாலு பேரோட பழகித்தானே ஆகணும். . . ஒவ்வொரு நிமிஷமும் நம்மைபத்தி இவன் என்ன நினைச்சுடுவானோ”**

என்று வாழ வேண்டியது இல்லை. நம்மகிட்ட கெட்ட எண்ணத்தோட கேவலமா நடந்துக்கிட்டா சரியான புத்தி புகட்டனும். இது நம்ம உரிமை. நம் உரிமையை யாருக்காகவும் விட்டுக்கொடுக்கக் கூடாது. நமக்குள்ள ஒரு கட்டுப்பாட்டை வைத்துக் கொண்டு நாம் முன்னேறும் வழிகளை நோக்கிச் செல்ல வேண்டும் என்று கூறி தன் தங்கையின் வாயை அடைத்தாள். இதுபோல, ஊராரின் ஏசலுக்காகப் பெண்கள் தங்களின் உரிமைகளை விட்டுக் கொடுக்காமல், முழு சுதந்திரத்துடன் எல்லாத் துறைகளிலும் ஆளுமைப் பெற்றவர்களாக விளங்கவேண்டும் என்பதை வலியுறுத்துகிறார்.

**முடிவுரை**

பெண்கள் தம் கட்டிய கணவனிடம் தான் கல்வி அறிவு பெற்றிருந்தாலும் அடிமைப்பட்டு இருக்கும் நிலையில் இருந்து, ஆணுக்குப் பெண் சமம் என்பதை உணர்ந்து, தனக்கு

இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்து வாழ்வதுடன், தனக்கான உரிமைகளை எப்பொழுதும் விட்டுக் கொடுக்காமல், அநீதியை எதிர்த்து தட்டிக்கேட்கும் உரிமை பெற்றவர்களாக மாற வேண்டும். பெண் அறியாமையில் இருந்து விழிப்புணர்வு அடைய வேண்டும் என்பதை இவ்வாய்வு உணர்த்துகிறது.

**அடிக்குறிப்புகள்**

இ. அண்ணாமலை (ப.ஆ.), க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, ப. 764.

திரு.வி.க., மு.நூ., ப. 23.

பாரதியார், பாரதியார் கவிதைகள், ப. 204.

நாஞ்சில் ஆனந்தன், சங்க இலக்கியத்தில் மனித உரிமைகள், ப. 30.

பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், ப. 19.

பாரதியார், பாரதியார் கவிதைகள், ப. 175.

மேலது., ப. 177.

மேலது., ப. 172.

**திறவுச் சொற்கள்**

இலக்கியம் – காலம் காட்டும் கண்ணாடி

பெண்மை – அடக்கம் , பொருமை, தியாகம்

சமத்துவம் - ஆணுக்கு சமம்

பெண்ணறிவு - பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான்

**துணைநூற்பட்டியல்**

திரு.வி.க., - பெண்ணின் பெருமை,
திருவரசு புத்தக நிலையம்,
சென்னை, முதற்பதிப்பு 2004.

நாஞ்சில் ஆனந்தன், - சங்க இலக்கியத்தில் மனித உரிமைகள்,
மனித உரிமைகள்,
கண்மணி பதிப்பகம், திருச்சி, முதற்பதிப்பு, 1999.

பாரதியார், - பாரதியார் கவிதைகள்,
பெண் விடுதலைக் கும்மி,
மணிவாசகர் பதிப்பகம், சென்னை, செம்பதிப்பு, 1994.

பாரதிதாசன், - ‘பாரதிதாசன் கவிதைகள்’,
ஸ்ரீ இந்து பதிப்பகம்,
2, முத்துக்கிருஷ்ணன் தெரு,
த.வை.எண். 1040, பாண்டிபஜார், தியாகராய நகர், சென்னை-18.